Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 31 | 14-05-2003 | புதன்கிழமை | ஓசை 85

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத் தோட்டத்தை வளமாக்க தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித்தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.

ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3255)

## வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு

# போதிய அதிகாரங்களுடனான நிர்வாக, நிதி கட்டமைப்பொன்று இருத்தல் அவசியம்

## விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் பின்னர் தமிழ் கூட்டமைப்பு பா.உறுப்பினர் இரா.சம்பந்தன்



(அலுவலக செய்தியாளர்)

**வட-கிழக்கை கட்டி எழுப்புவதற்கும் மக்களின் இயல்பு வாழ்வில் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கும் நிர்வாக ரீதியாகவும் நிதி ரீதியாகவும் மற்றும் வேண்டிய துறைகளில் போதிய அதிகாரங்களுடன் கட்டமைப்பொன்று இருத்தல் அவசியம் என்று தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது அத்தியாவசிய மனிதாபிமான புனர்வாழ்வு வேலைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள சிரான் என்று அழைக்கப்படும் உபகுழு இந்தக் கடமையை நிறைவேற்றக்கூடிய நிலையில் இல்லை. 'நேஸ்' என்று வட-கிழக்கிற்கான புனர்வாழ்வு நிதி அமைக்கப்பட்ட போதிலும் அது இன்னமும் இயங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை விரைவில் திருப்பி அனுப்ப நடவடிக்கை

### இந்திய மத்திய அரசு அறிவிப்பு

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை கூடியவிரைவில் அவர்களது தாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இராமநாதபுரம் மண்டபத்தில் உள்ள அகதிகள் முகாமைப் பார்வையிட வந்த மத்திய உள்துறை சிறப்புச் செயலாளர் ஆர்.கே.சர்மா அகதிகளைச் சந்தித்து அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் பற்றி கேட்டறிந்தார்.

பின்னர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய பின், செய்தியாளர்களிடம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் குழு உறுப்பினர்கள் மீது மட்டு.வில் கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரத்தில் புளொட் குழுவினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 6.00 மணிக்கு இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவர்களில் இருவரின் நிலை கடுமையாக உள்ளது. புளொட் அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் கரபந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## தமிழ் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வனுடன் மூன்றரை மணிநேரம் சந்திப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வன் அவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இக்கலந்துரையாடல் ஆரம்பமாகி பிற்பகல் 1.45மணிவரை இடம்பெற்றது. இச்சந்திப்பில் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் ஜோசப் பரராஜசிங்கம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார், சந்திரநேரு அரியநாயகம், வெள்ளிமாலை, மாவை சேனாதிராஜா, சிவலிங்கம்,

(08ஆம் பக்கம் பார்க்க)



## பொதுத்தேர்தலைச் சந்திக்க அரசாங்கம் தயாராகவேயுள்ளது!

### அமைச்சர் பீரிஸ்

அரசாங்கம் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயார் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது இருக்கும் பாராளுமன்ற ஆசனங்களை விட அதிகமான ஆசனங்களைப் கைப்பற்ற முடியும் என ஆய்வுகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. இதனால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தால் அதனைச் சந்திக்க அரசாங்கத்திற்குப் பலமுள்ளது என அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க அரசு தயாராகவுள்ளது. ஜனநாயகத்திற்கு எதிரான முறையில் செயற்படுவ

(08ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் நடவடிக்கையால் அரசியல் நெருக்கடி தோன்றியது

### பட்டி வீரக்கோன்

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப் பேற்றுள்ளமை அரசியல்யாப்பு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி என்ற முறையில் ஒரு அமைச்சை அல்லது அமைச்சின் ஒரு பகுதியைப் பொறுப்பேற்கின்ற அரசியல் யாப்பு உரிமை சனாதிபதிக்கு இருக்கின்றது. ஆனால் சனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இருந்த பாராளுமன்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் தீர்மானத்தை மாற்றக்கோரி நாடுதழுவிய ரீதியில் போராட்டம்!

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றியமைக்குமாறு கூறி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

பாராளுமன்ற பெரும்பான்மை கொண்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு வற்புறுத்தல்களை சனாதிபதி மேற்கொள்ளக்கூடாது என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் வற்புறுத்தியுள்ளனர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும்படி இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அநுராதபுர மாவட்டத்தில் பல பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அநுராதபுர சுற்று வட்டத்திற்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ குழுவின் மத்.குழு உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்டார்

(வவுனியா செய்தியாளர்)

ரெலோ அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக்காலை 8.30 மணிக்கு கற்குழியில் உள்ள ரெலோ அமைப்பின் அலுவலகம் முன் இவர் நின்று கொண்டிருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வேலாயுதம் சிவரமேஸ்(வயது-29) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (10)

## சமாதானத்திற்கு எதிரான அணியினரால் ரெலோ உறுப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியாவில் ரெலோ மத்திய குழு உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமானது சமாதானத்திற்கு எதிரான அணியினரால் நடத்தப்பட்ட தாக்குதலாகும் என ரெலோ அமைப்பின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சமாதானச்சூழல் ஏற்பட்ட கடந்த ஒரு வருட காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சம்பவம் இதுவாகும். தமிழ் கூட்டமைப்பினருக்கு எதிராக நடத்தப்பட்ட முதல் தாக்குதலும் இதுவாகும். கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்திருக்கின்ற நிலையையும், தற்போது உள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)

# பார்த்தீனியத்தை உடன் அழிக்க நடவடிக்கை நிதியினை கிளி.அரச செயலகம் வழங்கும்

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் வேகமாகப் பரவிவரும் பார்த்தீனியம் எனப்படும் நச்சுத்தாவரத்தை அழிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. இராசநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று கிளி. அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினிடம் இவ்வாறு அரச அதிபர் உத்தரவிட்டார்.

விவசாயத்தை அதிகளவில் மேற்கொள்ளும் கிளி. மாவட்டத்தில் இத்தகைய நச்சுத் தாவரங்களின் பரவல் விவசாயச் செய்கையை பெரிதும் பாதிக்கும். எனவே இது சம்பந்தமாக ஆராய்ந்து உடனடியாக இதனை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இதற்கான நிதியுதவியை கிளி. அரச செயலகம் வழங்கும் எனவும் தெரிவித்தார். (லோ)

## மாதகலில் தாக்கப்பட்ட மீனவர் ம.உ.ஆணையகத்தில் முறையீடு

யாழ். மாதகல்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்ட போது சிறிலங்காக் கடற்படையினரால் தாக்கப்பட்ட மீனவர்கள் மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இருவரும் நேற்று முன்தினம் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து மனித உரிமை அலுவலக அதிகாரி சிறிலங்காக் கடற்படை அதிகாரிகளிடம் தொடர்புகொண்டுள்ளனர்.

## ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

# நேர்முகப் பரீட்சை யூனில் நடத்த ஏற்பாடு!

(வவுனியா செய்தியாளர்)

ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள சகல ஆசிரிய பயிற்சி கலாசாலைகளுக்குமான விண்ணப்பங்களை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முகவரிக்கு அனுப்பி வைத்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 30, 31 ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள அனைத்து ஆசிரியர்களையும் உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேணாட் தெரிவித்துள்ளார். (10)


வாடகைக் கார் உரிமையாளர் கழகம் வன்னி

## பொதுக் கூட்டம்

வாடகைக் கார் உரிமையாளர் கழகத்தில் உறுப்புரிமை பெற்ற ஊர்தி உரிமையாளர்களுக்கான பொதுக் கூட்டம் வரும் 15-05-2003ஆம் நாள் வியாழன் காலை 11.00 மணிக்கு புதுக்குடியிருப்பு த.போ.கழகப் பணிமனையில் தலைவர் வீ. சிதம்பரநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெறும். அனைத்து உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் சென்ற ஆண்டு கூட்டறிக்கை வாசித்தல்
- கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்
- நிர்வாகம் தெரிவு செய்தல்
- ஊர்திகளின் பணி தொடர்பாக ஆராய்தல்
- ஏனைய வீடயங்கள்
- நன்றி உரை

அன்ரனி பேசி சேவியர்
செயலாளர்,
வா.கார் . உ. கழகம், வன்னி.

(சி-7742)


## மாதர் சங்கக் கூட்டம்

சிவநகர் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களை ஒன்று கூட்டி மாதர் சங்கத் தெரிவு நேற்றுக் காலை 10.15 மணிக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் சிவநகர் வலயப் பொறுப்பாளர் கஸ்ரோ தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. முதல் நிகழ்வாக மாதர் சங்கம் அதன் செயற்பாடு தொடர்பாக முல்லை. மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி கருத்து வழங்கினார். அடுத்து கிராம சேவையாளர் வே. பரமலிங்கம் அவர்கள் கருத்துரை வழங்கினார். அடுத்து கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. விஜயராணி அவர்கள் மாதர் சங்கத்தின் பதிவு. நோக்கம் தொடர்பாக கருத்து வழங்கினார். தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் திரு.இ.பிறையாளன் அவர்கள் இன்றைய சமகால அரசியல் பற்றி கருத்துரை வழங்கினார். (26)

## கருத்தரங்கு

மனித உரிமைகள் தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் கேட்டறியும் கருத்தரங்கு வவுனியாவில் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா நகரசபை உள்ளரங்கில் இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் தலைமையில் இக்கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. (10)

## நடவடிக்கைகள் வழக்கம் போல்

அபிவிருத்தி லொத்தர் சபை நடவடிக்கைகள் எவ்வித தடைகளும் இன்றி வழமை போன்று இடம் பெறுவதாக அதன் தலைவர் பெர்ணான்டோ நேற்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு அதிகாரத்திற்கு வந்தவேளையில் லொத்தர் சபையின் வருமானம் 196 கோடி ரூபாவாக இருந்தது 2002 ஆண்டு இது 284 கோடிரூபாவாக அதிகரித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணியாளர்களுக்கு மருத்துவ சேவை

மல்லாவிப் பிரதேசத்திற்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான விசேட வைத்திய பரிசோதனையும் நோய்த்தடுப்பூசி ஏற்றலும் நாளை காலை 10.00 மணிக்கு மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறவுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையூடாக ஏற்கனவே நடாத்தப்பட்ட வைத்திய பரிசோதனையில் பங்குகொள்ளாதவர்கள் இதில் பங்கு கொண்டு தம்மை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேற்படி பரிசோதனை முடித்துக் கொண்டவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. இதனைப் பெறாதவர்கள் இனிவரும் காலங்களில் உணவகங்களில் கடமை புரிய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (07)

## சனாதிபதியின் நடவடிக்கை சமாதானத்தைப் பாதிக்கும்

சனாதிபதி தனது அதிகாரத்தைக் கடுமையாகப் பயன்படுத்துவது சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று முன்னாள் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கை சிறுபான்மை மக்களை அதிகமாகப் பாதிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## VACANCY TRANSLATOR

மொழிபெயர்ப்பாளர் (English-Tamill, Tamil-English) M.S.F. ஹொலன்ட், புதுக்குடியிருப்பு வைத்திய அதிகாரி ஒருவருடன் வைத்திய ஆலோசனையில் ஈடுபடுவதற்கு முழுநேர மொழிபெயர்ப்பாளர் தேவை. இப்பணி ஆனி 1ஆம் திகதி ஆரம்பமாகிறது. தேர்வு நாடியிடம் பின்வரும் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயது 25-50 விரும்பத்தக்கது.
- சரளமாக ஆங்கிலத்தில் எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருத்தல்.
- கல்விச் சான்றிதழ்களின் பிரதியுடன் உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை 23-05-2003 இற்கு முன் அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி :-

M.S.F. - HOLLAND
WARDNUMBER-07
PUTHUKKUDIYIRUPPU.

(சி-7744)



## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
09 - 07 - 1982

மறைவு
04 - 04 - 2003



நல்லையா ரமேஸ்குமார்

உள்ளத்தால் மென்மையானவனே
உன் இழப்பால் எம் இதயம்
வாடிப்போனதையா!
வசந்தம் மீண்டும் வருமா?
நான்கு வரிகளில் முடிக்கலாமா
உன் பெயரை – எம்
நரம்பைக் கொண்டு
தைத்தாலும் நகராதையா
உன் நினைவு
உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்

(3258)



## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் முத்தாய்
24
-
12
-
1983



மண்ணில் வித்தாய்
25
-
04
-
2001

திதி : 14-05-2003

2ஆம் லெப். விஜிதா

கணபதிப்பிள்ளை புஸ்பநிதி (கிருசா)
நட்டாங்கண்டல்

அன்னை மண் மீட்ிட
அண்ணன் அணி சேர்ந்து
மூன்றாண்டு பல களம் கண்டு
அக்கினிச்சுவாலையில்
அன்னை மண்ணை முத்தமிட்டாய்
ஈராண்டு சென்றாலும்
ஆறாதம்மா உன் நினைவு.

தகவல்: குடும்பத்தினர்
நட்டாங்கண்டல்.

(3254)



## 18 ஆம் ஆண்டு நினைவு

தாயின் மடியில்
16 - 03 - 1964

தாயக மடியில்
14 - 05 - 1985



2 ஆம் லெப்டினன்
பிரசன்னா
(இரத்தினம் சதானந்தன்)

தமிழனின் மானம் காக்கப் புறப்பட்ட
வீர மறவனே!
எமது தலைகளும் நிமிர்ந்தது
உனது தியாகத்தால்
இழப்பின் துயரம் நெஞ்சை வாட்டினும்
இன்றைய நாளில்
உலகம் மதிக்கும் உனது வீரத்திற்குத்
தலை வணங்குகின்றோம்.

உன்நினைவோடு தினம் வாடும்
அன்புத்தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்.

(3261)

# றியாத்தில் அமெரிக்க குடியிருப்புக்கள் தொடர் குண்டு வெடிப்புக்களால் சிதைந்தன

## –கொலின் பவல் வருகைக்கு முன் சம்பவம்

(றியாத்)

**சவுதி அரேபியாவின் தலைநகரில் அமெரிக்கர்கள் குடியிருக்கும் பகுதியில் நேற்று முன்தினமிரவு நான்கு குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடைபெற்றது இதில் பத்து பேர் பலியானதுடன் ஐம்பது பேரளவில் காயமடைந்துள்ளனர். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் வருகை தருவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

றியாததில் இந்த நான்கு குண்டு வெடிப்புக்களும் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளதுதாக சவுதியின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அல்கொய்தா அமைப்பினரின் தாக்குதலாக இது இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளநிலையில் இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சவுதி அரேபியாவி லுள்ள அமெரிக்க பிரஜைகளுக்கு அமெரிக்கா அவ்வப்போது தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற எச்சரிக்கையை விடுத்து வந்த நிலையில் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இதற்கு முன்னர் இவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெற்றிருக்கவில்லை என்று சவுதி அரசு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் திட்டமிட்டவாறு நேற்று சவுதி அரேபியா போய் சேர்ந்துள்ளார்.

ஈராக்கில் புதிய நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கும் அமெரிக்க மேற்காசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முயன்று வருகின்றது இதன் ஒரு பகுதியாகவே அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் வளைகுடா நாடுகளுக்கான பயணம் அமைந்துள்ளதாக கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

## 'பொடோ' வின் கீழ் கைது!

(புதுடில்லி)


மும்பை புறநகர் பகுதி முலன் எனும் பகுதியில் சென்றமாதம் ரயில் வண்டியில் குண்டு வெடித்துப் பலர் உயிரிழந்த சம்பவம் தொடாபான வழக்கில், பகுதிநேரப் பேராசிரியர் அன்பர் அலி பொடோ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

## சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

'சார்ஸ்' நோயைக் கட்டுப்படுத்த 2கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக சீனாவுக்கான நிதியுதவியாக 20 லட்சம் டொலர்களை வழங்க முடிவு செய்துள்ளது.

முப்பது நாடுகளில் சார்ஸ் பரவி உள்ளது சீனாவில் மட்டும் இந்நோயால் இதுவரை ஏழாயிரம் பேர் பீடிக்கப்பட்டுள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அழிக்கப்படும் வெடி பொருட்களினால் ஏற்பட்ட புகைமண்டலம்.

## செச்சினியாவில் பாரிய குண்டுத் தாக்குதல் 40 பொது மக்கள் பலி;70 க்கு மேல் காயம்!

(மொஸ்கோ)

செச்சினியாவில் இடம்பெற்ற பாரிய குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் 40 பொது மக்கள் பலியானதுடன் 70 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

. வெடி பொருட்கள் அடங்கிய பார ஊர்தியை நகர் ஒன்றின் அரச கட்டடத்தின் மீது செலுத்தியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் அரச கட்டடத்தின் ஒரு பகுதியும், பாதுகாப்புச் சபைக் கட்டடத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளது.

கட்டட இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்வதால் பலியானவர்களின் தொகை அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குத் தனி நாடு கோரிப் போராடும் செச்சினிய தீவிர வாதிகளே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.



சார்ஸ் நோய் காரணமாக 3 மாதங்களுக்கு மூடப்படும் சீனாவின் சங்காய் நகரிலுள்ள சமாதான விடுதியில் ஒளி வெள்ளம்



அமெரிக்க பாதுகாப்பு மையத்திற்கருகில் உள்ள பந்தய திடலிலிருந்து திருடப்பட்ட குதிரை (அமெரிக்க படைகள் வெளியேறியதும் அங்கு ஈராக் பொலிசார் வன்முறையில் ஈடுபடுவதாக அறியப்படுகிறது)

## பேரழிவு ஆயுதங்களைக் கண்டறியச் சென்ற நிபுணர் குழு வெறும்கையுடன் திரும்பல்

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தஅமெரிக்க நிபுணர் குழுவினர் திருப்பி அழைக்கப்படவுள்ளனர்.

பேரழிவு ஆயுதங்களோ அவை இருந்தமைக்கான தடயங்களோ எதுவுமே கண்டுபிடிக்கப்படாத நிலையில் இவர்களை திருப்பியழைக்க அமெரிக்கா தீர்மானித்திருப்பதாக 'வாஷிங்டன் போஸ்ட்' தெரிவித்துள்ளது.

அதேசமயம், பேரழிவு ஆயுதங்களைக் கண்டறியும் பணியை ஈராக்கிய நில அளவையியல் குழுவினரிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அப் பத்திரிகை கூறுகிறது.

"ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதற்கான தடயங்களை கண்டெடுப்போம் என்ற நம்பிக்கையுடனே நாம் ஈராக் சென்றோம். ஆனால் ஈராக்கிலிருந்து வெறும் கையுடன் எமது குழு வெளியேறும் என்று நான் நம்பவில்லை" என கடற்படை அதிகாரி டேவிற் பெகட் கூறியுள்ளார்.

### ரஷ்யா பயணம்

ரஷ்யாவின் 06 நாட்கள் பயணமாக இந்தியவெளியுறவு, அமைச்சர் யஸ்வந்த்சின்கா புதுடில்லியில் இருந்து மொஸ்கோ பயணமாகியுள்ளார். ரஷ்யப் பிரதமர் உட்பட அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுக்களும் நடத்தவுள்ளார். மொஸ்கோ வரும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவலுடனும், அவர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

### ஒரேநாளில் 12பேர் பலி!

சார்ஸ் மூச்சுத் திணறல் நோயினால் சீனாவில் நேற்று முன்தினம் மட்டும் 12பேர் பலியாகியுள்ளார்கள்

அந்நாட்டில் இத் தொற்று நோய் மேலும் வேகமாகப் பரவிவருகின்றது.

நான்சிங் மாகாணத்தில் மட்டும் ஐநூறுக்கும் மேற்பட்ட முடிதிருத்தும் நிலையங்கள், இன்டநெட் மையங்கள் முதலானவற்றை அரசு மூடிவிட்டது பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் தனிமையில் வைக்கப்பட்டுள்ளார்கள். ,

## நெடுமாறன் மீதான வழக்கு 23ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக புத்தகம் வெளியிட்ட வழக்கில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடு மாறன் நேற்று சென்னை ஆலந்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

1993ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து 02 நூல்கள் வெளியிட்டமையினால் தான் பொடோவின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். நேற்றைய வழக்கு வரும் 23ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



பலஸ்தீன போராளியொருவரின் இறுதி மரியாதையின் போது கதறியழும் உறவினர்

# ஐ.தே.மு. அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதே சனாதிபதி சந்திரிகாவின் நோக்கம்

சி. சிவபாலன்



சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான ஒத்துழைப்பு அரசியல் முடிவுக்கு வந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. சிறிலங்காவின் அரசியலமைப்பின் கீழ் சனாதிபதியும் பிரதமரும் தமக்கேயுரிய அதிகாரங்களைக் கொண்டிருக்கையில் இவ் இரு அதிகாரங்களும் விட்டுக் கொடுப்புடன் செயற்படாவிட்டால் விளைவு என்னவாக இருக்கும் என்பது சரிபார்க்கப்பட வேண்டிய தருணம் இப்பொழுது வந்திருக்கிறது.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் குறைந்ததொரு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற பொழுதே நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிப் பீடமேற உடனடியாக அனுமதிக்கவில்லை. அமைச்சரவை ஒன்றை அங்கீகரிக்க ஐந்து தினங்களுக்கு மேல் எடுத்தது. சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச நிலைமை குறித்து எடுத்து விளக்கிய பின்பே சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையை அங்கீகரித்தார்.

இதில் தனது பாதுகாப்புக்கெனத் தனிப் பிரிவை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டார். தனது சகாவாக இருந்து விரோதியாகிய எஸ்.பி. திசாநாயக்காவிற்கு சமுர்த்தி அமைச்சை வழங்க மறுத்தார். எப்படியோ ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பதவி ஏற்றுக் கொண்டது. ஆனாலும், அமைச்சரவை மாற்றம் ஒவ்வொரு தடவையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பல முட்டுக் கட்டைகளின் மத்தியிலேயே சாத்தியமாகியது.

பதவி ஏற்றதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உள்ள பாராளுமன்றத்தை அது தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடத்தில் கலைக்கும் அதிகாரத்தைப் பறிக்க ஐ.தே. முன்னணி முயன்றது - முடியவில்லை. அதேவேளை, ஒரு வருடத்தில் கலைக்கும் அதிகாரம் சனாதிபதி கைக்குக் கிடைத்தும் அதனைச் செயற்படுத்த அரசியல் சூழ்நிலை சந்திரிகாவிற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் விட்டுக் கொடுப்பு அரசியல் பற்றியும் பாராளுமன்றத்தைத் தான் கலைக்கப் போவதில்லை என்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடிதம் ஒன்றை வழங்கினார். ஆனால், நாட்டின் இறைமைக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நடந்து கொள்ள முயன்றால் அந்த அதிகாரத்தை மீண்டும் தான் கையிலெடுத்துக் கொள்ளப் போவதாக சந்திரிகா அறிவித்திருந்தார்.

சந்திரிகாவின் இக்கடிதத்தை நம்பி பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என ஐக்கிய தேசிய முன்னணி உறுதியுடன் இருந்திருக்கும் என எவருமே கூறிவிட முடியாது ஏனெனில் சந்திரிகாவின் சொல்லுக்கும் செயலுக்கும் ஒருபோதும் ஒற்றுமையிருந்ததில்லை. தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியின் அறுவடையாகவே ஐக்கிய தேசிய முன்னணி ஒரு உறுதியான அரசாங்கத்தைக் கொண்டிருந்தது. பேச்சுவார்த்தையைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியதும் பங்குச் சந்தை விலை வீழ்ச்சியிலிருந்து பொதுசன ஐக்கிய முன்னணியின் தொல்லைகள் வரை அரசாங்கத்திற்கு பல இடர்பாடுகள் தோன்றிவிட்டன.

இவ்வாறானதொரு தருணத்தைத் தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்பார்த்திருக்கிறார் என்பது முன்னரே ஊகிக் கப்பட்ட விடயமுமாகும். பொ.ஐ. மு. தேர்தலில் தோல்வி கண்டு ஐக்கிய தேசிய முன்னணி பதவியேற்றதும் அந்த ஆட்சியின் ஆயுட்காலம் இரண்டு வருடங்கள் தான் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிர்ணயித்திருந்தார். இதற்கு சமாதான முயற்சிகள் ஒரு சில மாதங்கள் மட்டுமே நீடிக்கும். பின்னர் யுத்தம் ஆரம்பித்தால் பொருளாதார நெருக்கடியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியை விட்டு தானாகவே ஓடிவிடுவார் என சந்திரிகா எண்ணியிருந்ததே காரணமாகும்.

ஆனால்,சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாகச் சென்று உதவி வழங்குவோர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்குப் பெரும் நிதியுதவி கிடைத்துவிடுமோ? அவ்வாறு கிடைத்தால் பொருளாதார ரீதியில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பலமடைந்துவிடுமோ? என இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அச்சமடைந்துள்ளார்.



எனவே டோக்கியோ மாநாட்டுக்கு முன் இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுத்து இது ஒரு உறுதியற்ற அரசாங்கம் எனக் காட்டுவதால் இந்த நிதியை குறைந்தளவு கிடைக்கச் செய்வதே சனாதிபதி சந்திரிகாவின் திட்டமாகும். முன்னரே சில பொ.ஐ.மு.வினர் ஜப்பானில் நடைபெறும் மாநாட்டுக்கு முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கலைக்கப்படுமெனக் கூறிவந்தனர். எனவே அவ்வாறு பதவி நீக்கம் செய்துவிடுவதற்கு முடியாவிட்டாலும் அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுப்பது சனாதிபதியின் நோக்கமாகும்.

இதற்கென அரசாங்கத்தின் சில அமைச்சுக்களைப் பறிக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டார். முதலில் அவர் தனக்கு எதிரான அவதூறுப் பிரசாரம் செய்வதாகக் கூறி தொடர்பு சாதன அமைச்சுப் பொறுப்பேற்கப்படும் என மிரட்டியிருந்தார்.

பின்னர் உள்துறை அமைச்சில் கீழுள்ள பொலிசார் முறைதவறி நடப்பதாகவும் தமது ஆதரவாளர்கள் தாக்கப்படுவதாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டிவந்தார்.



கடந்த இருவாரங்களுக்கு முன் சனாதிபதி இந்தியா சென்றிருந்தபோது அவர் மீண்டும் கொழும்பு திரும்பியதும் உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்பார் என பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறிவந்தனர். இப்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும் சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருபவருமாகிய மிலிந்தமொறகொடவின் பொறுப்புகளில் ஒன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கிறது.

இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்படாமல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் அரசியல் ரீதியாகவும் அரசியல் யாப்பு ரீதியாகவும் பல நெருக்கடிகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பிரதமரின் ஆலோசனையில்லாது அமைச்சரின் பொறுப்பொன்றை பறித்துக் கொள்ளலாமா? என்பதற்கு அரசியலமைப்பு ரீதியாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் தெரியவரும்.

ஆனால் இவ்வாறானதொரு செயற்பாடு அரசாங்கத்தின் உறுதிப்பாடு குறித்து கேள்வி எழுப்பியிருப்பதானது நிச்சயமாக உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டைப் பாதிக்கும். உறுதியற்ற அரசாங்கத்திற்கு உதவிகள் கிடைப்பது அரிது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த நடவடிக்கைக்கு எதிராக இறுதிவரை போராடப் போவதாக ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்திருக்கிறது. "அத்துடன் பாராளுமன்றத்தைக் கலைப்பது அல்லது சனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கொண்டு வருதல் என ஐ.தே. முன்னணி தீவிர நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

தமது நடவடிக்கை சட்டத்திற்கு உட்பட்டது என பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துவரும் அதேவேளை மாற்று அரசாங்கமொன்றை அமைப்பதா? அல்லது பாராளுமன்றத்தைக் கலைப்பதா? என அது யோசித்து வருகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கத்தக்க வகையில் சனாதிபதி சந்திரிகா எடுத்துள்ள இந்நடவடிக்கையானது ஐக்கிய தேசிய முன்னணியை மட்டுமல்ல சிறிலங்காவின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பது வெளிப்படை..

ஆனால், ஆனால் இவ்விரு கட்சிகளும் கவனத்திற் எடுக்கப்போவதில்லை என்பதே உண்மையாகும்.


# முறிகண்டியில் பயணிகளைக் கவரும் உணவக சுகாதார நடைமுறைகள்!

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டிப் பகுதியில் உள்ள உணவகங்களில் சீராக சுகாதாரம் பேணப்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

உணவகங்களில் இலையான் போன்ற நோய்க் கிருமிக் காவிகள் மொய்க்கா வண்ணம் உணவுப் பண்டங்கள் மூடிப் பாதுகாக்கப்படுவதுடன் கேட்கப்படும் சிற்றுண்டிகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஏனையவை உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டு மூடிப் பாதுகாக்கப்படுகின்றன.

அத்துடன் "கேட்கப்படும் உணவுகள் மட்டும் வழங்கப்படும்" என அறிவித்தல்களும் தொங்கவிடப்பட்டுள்ளன.



மிக முக்கிய போக்குவரத்து தரிப்பிடமாக விளங்கும் இப்பகுதியில் உணவகங்களில் இவ்வாறான சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவது பிரயாணிகள் மத்தியில் மகிழ்ச்சியினையும், திருப்தியினையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்நடவடிக்கை தொடர்ந்தும் அப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் மக்கள் விரும்புகின்றனர்.

(லோ)

# ஏ—9 புனரமைப்புப்பணி குறித்த காலத்திற்குள் முடிக்கப்படும்

## - ஒப்பந்தகாரர் நம்பிக்கை

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதி திருத்த வேலைகள் திட்டமிட்டபடி ஒப்பந்த காலத்துக்குள் முடித்துக் கொடுக்கப்படும் என வேலை ஒப்பந்தகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி அமைப்பு வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. ஒரு வருட ஒப்பந்த காலத்திற்குள் வேலையினை முடிக்கக்கூடிய வகையில் கட்டங் கட்டமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வேலைகளுக்கான ஆளணி வசதிகள் வன்னியில் போதியளவு பெறக்கூடியதாக உள்ளது. சில நடைமுறைச் சிக்கல்கள் அவ்வப் போது ஏற்பட்டாலும் அவை தீர்க்கப்பட்டு வீதி அமைப்பு வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது எனவும் ஒப்பந்தகாரர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (லோ)

# மருதங்கேணியில் செயலகங்கள் அமைக்க காணிகள் ஒதுக்கீடு

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மக்களுக்குத் தேவையான முக்கிய அலுவலகங்களையும் தொழிற்சாலைகளையும் அமைப்பதற்காக காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐஸ் தொழிற்சாலை, எரிபொருள் நிலையம், உதவி அரச அதிபர் பணிமனை, கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், ஆரம்ப சுகாதார நிலையம் என்பனவற்றை அமைப்பதற்கான காணிகளே நில அளவையாளர் திணைக்களத்தால் அளந்து வழங்கப்பட்டுள்ளது.

இவற்றை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

(ம)

# மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார்

## ரணில் அரசாங்கத்தையும் ஏமாற்றினாரா?

"**வெ**ளிப்படையாகச் சொல்லப் போனால் முக்கியமானகவலை கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும் என்பதோ அல்லது கண் காணிப்புக் குழுவினின் அதிகாரத்தைக் கூட்ட வேண்டும் என்பதோ அல்ல. இலங்கை அரசும், மேலும் விடுதலைப்புலிகளும் தங்களது தலைவர்கள் கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்பாட்டை மேலும் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் இப்பொழுதுள்ள கவலை என்று நான் கருதுகின்றேன்"

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து இந்தியாவின் முன்னாள் துணை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பீற்றர் ஹொாக்லண்ட் தெரிவித்துள்ள அபிப்பிராயம் இதுவாகும். இது மாத்திரமல்ல, "சதீஸ் நம்பியாரின் யோசனைகள் கடந்த சனவரி மாதம் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா முன்வைத்த யோசனைகள் போன்றுள்ளது" எனவும் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற வேண்டிய ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறாத நிலையிலும் - டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது கேள்விக்குள்ளாகியுள்ள நிலையிலுமாக சமாதான முயற்சிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில், சதீஸ் நம்பியாரின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை வெளிவந்துள்ளமை சமாதான முயற்சிகளில் மேலும் இறுக்கமானதொரு நிலையைத் தோற்றுவிக்கும் ஒன்றாகியுள்ளது.

சதீஸ் நம்பியாரின் அறிக்கையானது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகுத் தீர்வொன்றைக் கொண்டுவரப் போவதில்லை என்பது ஏற்கனவே உணரப்பட்டதொன்றாகவே இருந்ததொன்று தான். இதற்கு ஒருபுறம் சதீஸ் நம்பியார் ஏற்கனவே வெளியிட்டிருந்த அபிப்பிராயங்களும், மறுபுறம் சதீஸ் நம்பியார் சிறிலங்கா அரசினால் ஒருதலைப்பட்சமான முறையில், அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்புடன் நல்லுறவைப் பேணாத அரசு ஒன்றின் படை அதிகாரி என்ற ரீதியிலும் நம்பியாரின் ஆலோசனைகள் குறித்த கேள்விகள் இருக்கத்தான் செய்தன.

இவற்றை சதீஸ் நம்பியாரின் அறிக்கையானது தற்பொழுது வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது எனின் மிகையாகாது. சதீஸ் நம்பியாரை ஆலோசனைக்கென அழைத்தது அரசாங்கமே ஆயினும், அரசாங்கம் (படைகள்) விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினர் இடையிலான பிரச்சினை ஒன்றிற்குத் தீர்வு காண்பதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

ஆனால், சதீஸ் நம்பியார் அதனைப் புரிந்து கொண்டுள்ளாரோ இல்லையோ ஆனால், அவரது அறிக்கையானது இதனைப் பிரதிபலிப்பதாக இல்லை. அறிக்கையின் பெரும் பகுதியில் அவர் சிறிலங்கா இராணுவத் தரப்பாகவும், பல இடங்களில் சிறிலங்கா எதிர்க்கட்சிகளின் தரப்பாகவும் பேசுபவராகவே உள்ளார். ஒருவகையில் பார்த்தால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சி களுக்குக்கூட சதீஸ் நம்பியாரின் அறிக்கை யானது அனுகூலமானதாக இல்லை. அதாவது, ரணில் அரசாங்கம் உளப்பூர்வமாகவே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாக இருந்திருப்பின் சதீஸ் நம்பியாரின் அறிக்கைகுறித்து பல கேள்விகளை அதுவே எழுப்பவேண்டியதாக இருக்கும்.

சதீஸ் நம்பியார் அரசாங்கத் தரப்பால் ஒருதலைப்பட்சமாக நியமிக்கப்பட்டிருப்பினும், சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் என இரு தரப்பு சம்பந்தப்பட்டுள்ள இவ்விடயத்தில் இருதரப்பினரது அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டிருத்தல் அவசியமானதாக இருப்பினும், சதீஸ் நம்பியார் சிறிலங்கா அரசு தரப்பாகவே முற்றிலும் நின்றுகொண்டு விட்டுள்ளார். விடுதலைப் புலிகள் தரப்புடன் அவருக்கு அறவே தொடர்புகள் அற்றதாக இருப்பினும் இவ்விடயத்தில் விடுதலைப் புலிகளின் அபிப்பிராயத்தினை மூன்றாம் தரப்பு ஊடாகவேனும் அவர் அறிந்து கொள்ள முற்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், சதீஸ் நம்பியாரோ புலிகளின் அபிப்பிராயம் தேவையற்றது என்ற ரீதியில் நடந்துகொண்டுள்ளார்.

சதீஸ் நம்பியாரின் இவ் அறிக்கையானது மூன்று விடயங்கள் பற்றிப் பரவலாகக் கூறுகின்றது.


- இராணுவத் தரப்பினதும், எதிர்க் கட்சிகளினதும் நிலைப்பாடுகள் பற்றியது.
- கண்காணிப்புக் குழு பற்றியது.
- உயர் பாதுகாப்பு வலயத்தின் இருப்புப் பற்றியது.

இதன் பிரகாரம் பார்க்கையில், லெப். ஜெனரல் சதீஸ் நம்பியாரின் இராணுவத் தரப்பினதும், எதிர்க்கட்சிகளினதும் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதில் காட்டிய ஆர்வத்தைப் போன்றளவு தானும் ஆலோசனைக்கு அழைக்கப்பட்ட நோக்கம் குறித்து அறிந்து கொண்டிருந்தாரா என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும். ஏனெனில், இராணுவத் தரப்பினதும் எதிர்க்கட்சியினரின் அபிலாசைகளைப் பிரதிபலித்தது போன்று யுத்த நிறுத்தத்தை மேம்படுத்தவும், சமாதான முயற்சிகளை முன்னேற்றுவதற்குமான வகையில் அவரது ஆலோசனைகள் அமையவில்லை.

எடுத்துக் காட்டாக, கடந்த சனவரி மாதத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உயர் பாதுகாப்பு வலயத்தை மீளமைக்க தெரிவித்த நிபந்தனைகளே பாதுகாப்பு உபகுழுக் கூட்டங்கள் தொடர்ந்துகூட முடியாமல் போனமைக்குக் காரணமாகின. இந்நிலையில், சதீஸ் நம்பியார் அதேபோன்ற நிபந்தனைகளை முன்வைத்துள்ளமையானது சதீஸ் நம்பியார் ஏன் அழைக்கப்பட்டார் என்ற கேள்வியையே எழுப்புவதாக உள்ளது. அதாவது, முன்னர் கூறிய யோசனைகளைக்கூற வெளிநாட்டு ஆலோசகர் ஒருவர் தேவைதானா?

அவ்வாறு இல்லாதுவிடில் இவ்விடயத்தில் அரசாங்கம் தனது இராணுவத்தின் நிலைப்பாட்டை முழு அளவில் ஆதரிப்பதோடு, அதற்கு வெளிநாட்டு இராணுவ ஆலோசகரின் சிபார்சுடன் அதனை வலியுறுத்த முற்பட்டுள்ளதாகவே அர்த்தம் கொள்ளப்படும்.

இதில், இரண்டாவது விடயத்தில், கண்காணிப்புக் குழு பலப்படுத்தப்படுதல் வேண்டும். அதன் ஆளணி மற்றும் வசதிகள் பெருக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகள் உள்ளன. ஏற்கனவே கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்களைப் பலப்படுத்துவது குறித்தும்,



கண்காணிப்புக்குழுவில் மேலும் பல நாட்டவர்களையும் சேர்த்துக் கொள்வது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், சதீஸ் நம்பியாரின் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள், வசதிகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை என்பன அதிகரிக்கப்பட வேண்டும் என்ற சிபார்சானது புதிய சில கேள்விகளை எழுப்புவதற்குக் காரணமாக அமையக்கூடியவையாகும். அதாவது, இந்தியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுதல் வேண்டும் என்றதொரு அபிப்பிராயம் தற்பொழுது எதிர்த்தரப்பினால் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் சதீஸ் நம்பியாரின் சிபார்சானது அதனுடன் இணைந்ததொன்றாகவும் நோக்கின்தக்க தொன்றே ஆகும்.

அவ்வாறானதொரு நோக்கத்தையே அது கொண்டதாக இருப்பின் இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு மேலும் சிக்கல் நிறைந்ததாக மாற்றப்படுவதாகவே இருக்கும். அதாவது, இன்று சிறிலங்காவில் அரசாங்கம் சமாதான முயற்சிகளை எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பால் சந்திக்கும் நெருக்கடிகளைப் போன்று கண்காணிப்புக் குழுவிற்குள்ளும் முரண்பாடுகள் தோற்றம் பெறவும், வலுவடையவும் வாய்ப்பளிக்கக் கூடியதாகும்.

அடுத்ததாக உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சதீஸ் நம்பியார் முன்வைத்துள்ள சிபார்சுகள், சிறிலங்கா இராணுவத்தின் சந்தேகங்கள், ஐயங்கள் என்பனவற்றை ஆதரமாகக் கொண்டவையாகவும், முற்றிலும் இராணுவ ரீதியிலான நோக்கம் கொண்டவையாகவுள்ளது. அது மாத்திரமல்ல, சதீஸ் நம்பியாரின் சில யோசனைகள் புரிந்துணர்வு உடன்பாட்டிலேயே சில மாற்றங்களை செய்தல் வேண்டும் என்ற வகையில் அமைந்ததாகவுள்ளது. குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுதல் வேண்டும் என்பது போன்றும் உள்ளது.

இந்த வகையில் பார்க்கையில் சதீஸ் நம்பியாரின் அறிக்கையானது யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்தில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்களை நீக்குவதற்கான ஆலோசனைகளாக இல்லாதது மட்டுமல்ல நெருக்கடிகளையும், சிக்கல்களையும் தோற்றுவிப்பதற்கான ஆலோசனைகளையும் கொண்டதாகவே உள்ளது.

இந்நிலையில், எழும் முக்கியமான கேள்வியானது, சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் எதற்காகக் கோரியது? அடுத்ததாக தனது சுயவிருப்பில் கோரியதா? அன்றி யாருடைய நிர்ப்பந்தத்தின் பெயரில் கோரியதா? என்பதே ஆகும்.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ. தே. முன்னணி அரசாங்கம் நம்பியாரிடம் இருந்து சுயவிருப்பின் அடிப்படையில் ஆலோசனைகளைக் கோரியிருப்பின் சமாதான முயற்சிகளைத் தாமதப்படுத்த அன்றி பிற்போட அல்லது படிப்படியாகக் கைவிட அரசாங்கம் தீர்மானித்திருந்ததாகவே நம்பியாரின் யோசனைகள் கொள்ள வைக்கின்றது.

ஏனெனில், நம்பியாரின் அறிக்கையானது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திற்கு அனுகூலமானதொன்றாக அமையக் கூடியதாக இல்லை. தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் எவையும் சதீஸ் நம்பியாரினால் கருத்திற்கொள்ளப்பட்டதாக இல்லை. சிறிலங்கா இராணுவத்தினரின் அபிலாசைகளும், எதிர்கட்சியினரின் அபிப்பிராயங்களுமே கருத்திற்கொள்ளப்பட்டவையாகவுள்ளன.

ஆகையினால், அரசாங்கம் நம்பியாரின் அறிக்கையைச் சுயமாகவோ கோரப் பெற்றிருப்பின் நன்கு திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையை அரசாங்கம் தட்டிக்கழிக்க முற்பட்டுள்ளது என்றே கூறமுடியும்.

இதேவேளை, சதீஸ் நம்பியாரிடம் அறிக்கை கோரியமை வெளியாரின் நிர்ப்பந்தத்தின் விளைவு எனின் இது சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும், யுத்த நிறுத்தத்திற்கு எதிராகவும் வெளியில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தமாகவே இருக்க முடியும். ஆகையினால், சதீஸ் நம்பியாரின் இவ்வறிக்கையில் ஆக்கபூர்வமான / நடைமுறையில் சாத்தியப்பாடான விடயங்கள் இருப்பதென்பது கடினமானதாகவே இருக்கும்.

அதாவது, அரசாங்கம் விரும்பியோ அன்றி நிர்ப்பந்தத்தின் பாலோ அது எதுவாக இருப்பினும் சரி. சதீஸ் நம்பியாரிடம் அறிக்கை கோரியமையானது சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தில் அரசாங்கம் போட்ட முட்டுக்கட்டையாகவே கொள்ளத்தக்கதாகும். ஏனெனில், யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைப் போக்குவதற்குப் பதிலாக மேலும் இடையூறுகளை உண்டுபண்ணுவதாகவே சதீஸ் நம்பியாரின் அறிக்கை உள்ளது.

**- ஜெயராஜ்**

# குறுகிய அரசியல் நோக்கங்களைவிட்டு சமாதான முயற்சிகளை வலுப்படுத்துக

## அஸ்கிரிய, இராமன்ய நிக்காய பீடாதிபதிகள் அழைப்பு

(கொழும்பு)

குறுகிய அரசியல் நோக்கங்களைத் தவிர்த்து சமாதான முயற்சிகளை வலுப்படுத்துமாறு பௌத்த மதத் தலைவர்கள் ஆட்சியாளர்களைக் கோரியுள்ளனர்.

தேர்தல் சமயத்தில் தனித் தனியாக நடந்து கொண்டாலும் ஆட்சி நடவடிக்கைகளை அனைத்துத் தரப்பினரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம புத்தரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

பேதங்களை மறந்துவிட்டு அனைத்துக் கட்சிகளும் நாட்டின் அபிவிருத்தி கருதி ஒற்றுமையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று நாட்டில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு இது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

இராமன்ய நிக்காய மகாநாயக்கர் வேவல் தெனிய மேகலங்கார தேரர் கருத்துத் தெரிவிக்கையில்;

ஒரு சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றுவது உள்ளிட்ட தமது நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடந்து கொள்கின்றார்கள்.

தேசப்பற்று மிக்க அனைவரும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# படையிலிருந்து ஓடியவர் சிறையிலிருந்தும் ஓட்டம்

(கொழும்பு)

கடற்படையிலிருந்து தப்பியோடி சிறையில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் படைவீரர் அங்கிருந்தும் தப்பியோடியுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சிறைக்கூடத்தின் கம்பியை வெட்டிக் கொண்டே இவர் தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. ரத்கம பகுதியைச் சேர்ந்த இவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். அதனால் இந்நபரைத் தேடிவருகின்றனர்.

# கற்பித்தலில் டிப்ளோமா; யூனில் பட்டமளிப்புவிழா!

(வவுனியா செய்தியாளர்)

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா வரும் யூன் மாதம் இடம் பெறவுள்ளது.

இலங்கையில் உள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இப்பட்டமளிப்பு இடம் பெறவுள்ளது. அடுத்த மாதம் 09,10,11,12 ஆம் திகதிகளில் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பல்நோக்கு மண்டபத்தில் இப்பட்டமளிப்பு விழா இடம் பெறும் (10)

# யாழ். அரச அதிகாரிகளுடன் இளம்பரிதி சந்திப்பு

### - தற்கால நிலை குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நேற்று முன்தினம் காலை அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் அரச அதிபர் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

தற்கால அரசியல்நிலைமை கலாச்சார சீரழிவு, வளங்களின் வீண் விரயம் என்பன தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

# விசேட மாதாந்த கொடுப்பனவு

(கொழும்பு)

தேசிய விளையாட்டுக் கழகங்களுக்குப் பயிற்சி அளிப்பவராக நியமிக்கப்பட்டோருக்கு விசேட மாதாந்தக்கொடுப்பனவை வழங்குவது என்று விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறிலங்காவின் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் அடுத்த மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் என்று விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகம் நெல்சன் அமரதுங்க தெரிவிக்கையில்; பயிற்சி அளிப்பவர்கள் 5000 ரூபாவில் இருந்து 15000 ரூபா வரையில் இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்று கூறினார்.

# செயலகம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப்பேரவையின் கோட்டச் செயலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் அ.திருநாவுகரசு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெயர்ப்பலகையினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந. செல்வராசா திரை நீக்கம் செய்தார். செயலக நாடாவினை கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அதிபர் பொ. அருமைச்சந்திரன் வெட்டிதிறந்து வைத்தார். இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் பொதுமக்கள் அரச உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# பேருந்து தீக்கிரை

மத்திய மாகாணத்தில் ஹாலி-எல தேசிய பாடசாலைக்கருகாமையில் துவிச்சக்கர வண்டியில் சென்றவரை மோதிய பேருந்தை மக்கள் தீக்கிரையாக்கியுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற விபத்தில் 21 வயது கே.எம். உபாலி நிசங்க என்ற இளைஞர் பலியாகியுள்ளார்.

# பொது நூலகம் கையளிப்பு

புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகக் கட்டடத்தை கட்டடத் திணைக்களம் உத்தியோக பூர்வமாக மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கத்திடம் கையளித்துள்ளது.

எனினும், புனரமைக்கப்பட்ட பொதுநூலகம் எப்போது பொது மக்களின் பாவனைக்கு விடப்படும் என்பது குறித்து ஆணையாளர் கருத்துக் கூற மறுத்துள்ளார்.

# நிதி ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நான்கு அரசாங்க வைத்திய சாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்ய ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கிற்கு அவசர புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆரயம்பதி, களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்திய சாலைகள் செங்கலடி கிராமிய வைத்தியசாலை மண்டூர் மத்திய மருந்தகம் என்பவற்றிற்கு தலா 30இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# மாற்று அரசாங்கம் அமைப்பது குறித்து ஆராய பொ.ஐ.மு குழு அமைப்பு

(கொழும்பு)

**ஆளும் அரசை வீழ்த்தி மாற்று அரசை அமைக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி மேற்கொண்டு வருகின்றது.**

அண்மையில் கூடிய பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்குழு இதனை ஆராய்வதற்கான விசேட குழுவொன்றை அமைத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, லக்ஸ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, கலாநிதி சரத்அமுனுகம, யானக பண்டார தென்னக்கோன் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளார்கள்.

மாற்று அரசாங்கமொன்றை அமைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இவர்கள் அறிக்கை சமர்பபிக்க உள்ளார்கள்.

# மாகாணக் கல்வியமைச்சின் குழுவினர் யாழ். விஜயம்

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ் குடாநாட்டுக்குச் சென்றுள்ளனர்.இந்தக் குழுவினர் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிவதோடு பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளனர்.இன்று தொடக்கம் 17 ஆம் திகதி வரை இக் குழுவினர் கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளனர்.



சேரன்
சேரன் சுவையகம்
இன்று கிளிநொச்சி நகரில் புதுப்பொலிவுடன்....

உலகத்துச் சிறப்பெல்லாம் உங்கள் முன் வைக்கின்றது
சேரன் சுவையகத்திற்கு உள்ளே .....' உலகத்தைச் சுற்றிய உணர்வுதரும் உணவு வகைகள்
உங்கள் விருப்பம்!
உங்கள் தெரிவு!
பலவகை உணவு!
சிறந்த தரம்
சிறந்த சுவை
சுத்தம்
விரைந்த சேவை
இனிப்பு! உறைப்பு!!
உவர்ப்பு!!! புளிப்பு!!!!
சுடச்சுட... ஆகா! ஓகோ!! பல்சுவை
இதமான சூட்டில்----- சுவைத்து மகிழ!
குளிர்களி! குளிர்பானம்!! மனம்குளிர்ந்து மகிழ !
ஒரே இடம்
சேரன் சுவையகம்
உங்கள் உணவுத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
காலை
நண்பகல் } சிறப்பு உணவு வகைகள்
இரவு
* சிற்றுண்டிகள்
* பானங்கள்
* சேரன் வெதுப்பக சிறப்பு உற்பத்திகள்
உங்கள் விருப்புக்கேற்ப தயாரித்து வழங்கப்படும்
குறிப்பு :-விழாக்கள் /நிகழ்வுகளுக்கான வேண்டுகைகள் உரிய கால முன்னறிவிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகட்கு :- சேரன் சுவையகம்
கண்டி வீதி,
கிளிநொச்சி.
தொலைபேசி எண்:- 021-2225709.
(3260)

## சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபோதும் சுமந்து கொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-05-2003

## அமுலாக்கம் இன்றிப் பயனென்ன?

"விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற வேண்டும்"; "டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றாது போனால் விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு வழங்கும் ஒத்துழைப்புக் குறித்து அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும்'' என்பது போன்ற அபிப்பிராயங்கள் சில வெளிநாட்டவரால் வெளியிடப்பட்டு வருவது அவதானிக்கத்தக்க தொன்றாகவுள்ளது.

ஆனால், இவ் அபிப்பிராயமானது ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயபூர்வமானதொன்றல்ல. ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் டோக்கியோ மாநாட்டிற்கோ அன்றிச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கோ முன் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. அரசாங்கம் உடன்பாட்டின்படி நிறைவேற்ற வேண்டிய தனது கடப்பாட்டை நிறைவேற்றுமாறே கோருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அண்மையில் நடந்த உயர் மட்டச் சந்திப்புக்களில் கூட தாம் யுத்தத்திற்குச் செல்லும் நோக்கம் எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளனர். அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொள்ளப் போவதாக எச்சரிக்கையோ அன்றி காலக்கெடுவுடன் கூடிய நிபந்தனைகளையோ விதிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கம் உடன்பாட்டின் மூலம் உறுதியளித்தவற்றையே நிறைவேற்றுமாறு கோருகின்றது.

இது கூடத் தமிழ் மக்களுக்கு சிங்கள ஆட்சித் தலைவர்கள் கொடுத்த வரலாற்றுப் பாடத்தினை அடியொற்றியதே ஆகும். அதாவது கடந்த காலத்தில் கிடைத்த படிப்பினையின் பாற்பட்டதே ஆகும். டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதானது வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு-புனரமைப்பு என்ற ரீதியில் சிறிதளவேனும் நிதி உதவி கிடைப்பதற்கு வழிவகுக்கும் என்பது புலிகளுக்கும் தெரிந்ததொன்றே. தமிழ் மக்களுக்கும் தெரிந்ததொன்றே.

ஆனால், வடக்கு-கிழக்குப் புனரமைப்பிற்கென கிடைக்கப் பெறும் இந்நிதியானது தமிழ் மக்களுக்கு வந்து சேருமா என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையில்- இந்நிதி குறித்துத் தமிழ் மக்கள் பெரியளவில் கவலை கொள்வதற்கு எதுவுமே இருப்பதாக இல்லை.

இது தனியாகக் கடந்த கால அரசியல் வரலாற்றினை மட்டும் ஆதாரமாகக் கொண்டதொன்றல்ல. தற்போதைய அரசின் செயற்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டதொன்றாகவே உள்ளது. அதாவது தற்போதைய அரசு கூடத் தமிழ் மக்களின் துயரம் துடைக்க விரைந்து செயற்படவோ அன்றி வாக்குறுதிகளை நிறைவு செய்யவோ இல்லை.

எடுத்துக் காட்டாகச் "சிரான்" அமைப்பின் செயற்பாடானது நிதி ஒதுக்கீடு தாமதத்தின் காரணமாக ஓர் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. ஆரம்பத்தில் இதற்கு உடன்பாடுகள், உதவிகள் தாமதமாகின்றன என அரசதரப்பால் தெரிவிக்கப்பட்டபோதும், தற்பொழுது சிரானுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் சட்டச் சிக்கல்கள் உள்ளதாக அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவதினால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கத்தக்க இலாபம் தான் என்ன? ஆனால், டோக்கியோ மாநாடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு முக்கியமானதொன்று என்பது வெளிப்படையானது. இதேவேளை, சிறிலங்காவிற்குக் கிட்டும் உதவியானது சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளது என்பதும் தெரிந்ததொன்றே.

ஆனால், சமாதானப் பேச்சுக்களில் இருந்து விடுதலைப்புலிகள் இடைவிலகியிருப்பினும் கூட அவர்கள் யுத்தத்திற்கு திரும்பவுள்ளதாக எவ்வித எச்சரிக்கையும் விடவில்லை. தமது கோரிக்கைகளை நிறைவு செய்யுமாறே கோரிவருகின்றனர். அதாவது உடன்பாட்டின் அடிப்படையிலான கோரிக்கைகளை நிறைவு செய்யுங்கள்; பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்றே கூறுகின்றனர்.

ஆகையினால், சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டுள்ள நாடுகள் - இராஜதந்திரிகள் புலிகளின் நிலைப்பாட்டை உணர்ந்து கொண்டு ஒப்பந்தச் சரத்துக்களை நிறைவு செய்யுமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் செலுத்த வேண்டும். புலிகளின் கோரிக்கைகள் நியாயப்பாடற்றவையாக இருக்கும் வகையில் புலிகள் சமாதானத்திற்கு விரோதமாகச் செயற்படுவதாகக் கூறுவது நியாயப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது. அது மாத்திரமல்ல, புலிகள் நியாயப்பாடான கோரிக்கைகளைக் கைவிட்டு டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதானது ஒருவகையில் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு ஊறு விளைவிப்பதாகிவிடும்.

# இலங்கையின் சமாதான முயற்சிகளில் பங்கேற்பதை மீள்பரிசீலிக்கவுள்ளேன்

## -சதீஸ் நம்பியார் புதுடில்லியில் கருத்து

நீங்கள் ஒருவரை வா என்று அழைத்துவிட்டு அவனை நோகடிக்கிறீர்கள். இலங்கை அரசியலின் போக்கு இதுதான் என்றால் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இனிப் பங்களிப்புச் செய்வதை நான் மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது தான். இனி வேறு வழியில்லை.

இவ்வாறு சிறிலங்காவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியான லெப்-ஜெனரல் சதீஸ் நம்பியார் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், என்னை முன்னிலைப்படுத்தி எனக்கு எதிரான அரசியல்வாதிகள் செய்த கண்டன விமர்சனங்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன.

பணம் கொடுத்து யாரையும் விலைக்கு வாங்கிவிடலாம் என்று யாராவது சொன்னால் அது பற்றி யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால், என்னை முன்னிலைப் படுத்தி இப்படிக் கூறியிருப்பது தான் என்னை மனக்கிலேசமடைய வைத்துள்ளது. அத்துடன் என் சுய கௌரவத்தையும் பாதிப்பதாகவே உள்ளது.

நான் மதிப்புக் கொடுப்பவற்றில் எனது சுயகௌரவமும் ஒன்று.

நான் சிறிலங்கா அரசிடமிருந்து எவ்வித பணமும் பெறவில்லை. எனது ஆலோசனை தேவை என்றார்கள். அதனை நான் கொடுக்க முயன்றேன். என்னைவிட இன்னொருவர் இருப்பாரேயானால் அவர்கள் அவரை நாடலாம்.

ஆலோசனைகளை நான் எனது தனிப்பட்ட கோதாவிலேயே நல்கினேன் என்றும் கூறியுள்ளார்.

# 10 கோடி ரூபா நிதி மோசடி; 4000 ஆசிரியர்கள் விசாரணை!

(கொழும்பு)

மத்திய மாகாண கல்வி அமைச்சில் இடம்பெற்ற ரூபா 10 கோடி மோசடி தொடர்பாக ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

1997 முதல் 2000 ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணக் கல்வி அமைச்சில் நடந்ததாகக் கருதப்படும் ரூபா 10 கோடி மோசடி தொடர்பாக 4 ஆயிரம் ஆசிரியர்கள் விசாரணைக்குட்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவர்கள் மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் சேவையாற்றுபவர்களாவர். கிடைக்கப் பெற்ற தகவல் களையடுத்தே இரகசிய பொலிஸார் இவர்களை விசாரிப்பதாகவும் கூறப்படுகிறது.

# சிறிலங்காவில் எதிர்க்கட்சி அரசியல் எதிர்கால முன்னேற்றத்திற்கு ஏற்றதல்ல!

## -பொருளியல் நிபுணர் வி.எம்.பர்ணாந்து கருத்து

(கொழும்பு)

"இந்நாட்டில் எதிர்க்கட்சி என்ற பதத்தில் அரசியல் எதிர்ப்பு என்ற பொருள் தெளிவாகிறது. இந்த எதிர்க்கட்சி அரசியல் இந்நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு பொருத்தமாகாது'' என பொருளியல் வல்லுநர் வின்சன்ட் மர்வின் பர்ணாந்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது; இந்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விடயங்கள் பல உள்ளன. சமாதானப் பாதையின் இலக்கை அடைதல், புனரமைப்பு வேலைகளின் வேகத்தின் சர்வதேச நம்பிக்கை, வெளிநாட்டுப் பொருளாதார நிலை என்பன அவற்றில் சில. இவற்றின் பயன்களை அனுபவிப்பதற்கு சகல அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும் இவ்வாறு ஒன்றுபடாமை பெருங்குறைபாடாகும்.

பொதுவிருத்தியைக் கவனத்தில் எடுத்து கட்சிப் பேதமின்றி அனைவரும் ஒன்றுபட இதுவே காலம் என்று அவர் கூறினார்.

# தாய்லாந்துப் பிரதமர் இன்று கொழும்பு வருகை

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் தாக்சின் சினாவத்த இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரதமரின் அழைப்பின் பேரில் வரும் இவர் இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருப்பார் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பலரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் கண்டிஉட்பட பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதோடு வெசாக்பண்டிகையிலும் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

# அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்றது சட்டப்படியானது

## சனாதிபதியின் சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையினை பொறுப்பேற்றமை தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி எடுத்திருக்கும் முடிவு சட்டப்படியானது என்று அவரது சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தத்தீர்மானம் சம்பந்தமான அறிவித்தல் வர்த்தமானி மூலம் வெளிவரவேண்டும் என்பது கட்டாயமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுசன ஐக்கிய முன்னணி நடத்திய செய்தியாளர்மாநாட்டில் இவ்வாறு கருத்துத் தெரிவித்த அவர் அரசியல் அமைப்பின் 44வது பிரிவு இதனை தெளிவாக வலியுறுத்துவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 4-வது டெஸ்டில் முக்கிய திருப்பம்

## வெற்றியின் விளிம்பில் மேற்கிந்தியத் தீவு அணி!

மேற்கிந்தியத் தீவில் நடைபெறும் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றியின் விளிம்பில் உள்ளது.

வெற்றி இலக்காக 418 ஓட்டங்களைக் கொண்டு துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின் போது ஆறு விக்கட் இழப்பிற்கு 371 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன்படி போட்டியில் வெற்றிபெறுவதற்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி மேலும் 47 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது.

விக்கட் இழப்பின்றி 47 ஓட்டங்களுடன் நான்காம் நாள் ஓட்டங்களை ஆரம்பிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 74 ஓட்டங்களைப் பெற்று 03 விக்கட்டை இழந்து பெரும் இக்கட்டை எதிர்கொண்டது.

எனினும் நான்காவது விக்கட்டுக்காக அணித் தலைவர் லாராவும், துணைத் தலைவர் நரேஸ் சர்வானும் 91 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை மீண்டும் ஸ்திர நிலைக்குக் கொண்டு வந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தப் போட்டியில் வெற்றிபெறும் இடத்து டெஸ்ட் போட்டியில் நான்காவது இனிங்சில் அதி கூடிய ஓட்ட இலக்கை வெற்றிகரமாகக் கடந்த அணி என்ற சாதனைக்கு உரித்தாகும்.




# நியூசிலாந்தை சிறிலங்கா 5 விக்கெட்டுக்களால் வென்றது

சிறிலங்காவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகளுக்குமிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நியூசிலாந்து அணியை சிறிலங்கா அணி ஐந்து விக்கட்டுக்களால் வெற்றி கொண்டது.

தம்புள்ளையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 43.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பதிலுக்கு ஆடிய சிறிலங்கா அணி 43.4 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

# சவூதியில் அமெரிக்கர் வாழும் பகுதியில்
# 4 தற்கொலைத் தாக்குதல்களில் 91 பேர் பலி

(றியாத்)

சவூதி அரேபியாவின் றியாத் நகரில் அமெரிக்கர்களும், பிரித்தானியர்களும் வாழும் பகுதிகளில் நடத்தப்பட்ட நான்கு வெவ்வேறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 91 பேர் பலியானதுடன் இருநூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பலியானவர்களில் தற்கொலைத்தாக்குதலில் ஈடுபட்ட ஒன்பது பேரும் அடங்குகின்றனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து அமெரிக்க அதிபர் உரையாற்றுகையில்;

போர் இன்னமும் தொடர்கின்றது என்பதைத்தான் இத்தாக்குதல்கள் நினைவூட்டுகின்றன.

இதனைச் செய்தவர்கள் அமெரிக்காவின் நீதி என்ன என்பதை விரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

அமெரிக்காவிற்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்தியவர்கள் மீது திருப்பித் தாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சவூதி செல்வதற்கு திட்டமிட்டிருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹொலின் பவல் திட்டமிட்டபடி சவூதி சென்றுள்ளார்.

அல்கொய்தா அமைப்பினரே இத்தாக்குதலை நடத்தி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்திகள் உள்ளே)

## அவசர கலந்துரையாடல்

வடமாகாணத்திற்கு உட்பட்ட அனைத்துத் தொண்டராசிரியர் பிரதிநிதிகளுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இதில் நடந்து முடிந்த செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளதால் இதற்கு அனைத்துப் பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் தருமாறு ஒன்றியம் வேண்டியுள்ளது.

## பயிற்சியில் ஈடுபட்டுள்ள கழகங்களுக்கான கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற உள்ளது.

எதிர்வரும் 17.05.2003 காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக்கழகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## எதுவித வசதிகளுமற்ற நிலையில் விவசாய ஆராய்ச்சி நிலையம்


(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் உள்ள வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் எதுவித வசதிகளுமற்ற நிலையில் மிக மோசமான நிலையில் உள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக அழிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சி நிறுவனம் இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை.

1996ஆம் ஆண்டுக்கு முன்னர் 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தம் 28 ஊழியர்களுடன் இயங்கிய இந்த நிலையத்தில் தற்போது ஆறு பேரே கடமையில் உள்ளனர்.

இதனால் ஆராய்ச்சி நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கான



ஆளணி வசதி, தொழில் நுட்ப வசதி, மற்றும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் விவசாய ஆராய்ச்சிப் பணிகள் இடம்பெறுவதில்லை.

ஆராய்ச்சி நிலையம் வேலி, நீர்ப்பாசன வசதி, மின்சார வசதி எதுவுமற்ற நிலையில் கட்டடங்கள் இடிந்து பற்றைகள் வளர்ந்த நிலை யில் மிக மோசமாகக் காணப் படுகின்றது.

இடிந்த கட்டடத்தின் ஒருபகுதியில் உள்ள தற்காலிக அறை ஒன்றிலேயே வசதிகள் எதுவுமற்ற நிலையில் இதன் அலுவலகம் இயங்குகின்றது.

இந்த ஆராய்ச்சி நிறுவனத்தினை முழுமையாக இயங்கவைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனக் கோரப் படுகின்றது. (லோ)

# அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம்
# ரணிலின் கடிதத்திற்கு சந்திரிகா பதில்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை சிறிலங்கா சனாதிபதி பொறுப்பேற்றமை தொடர்பான பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்திற்கு சிறிலங்கா சனாதிபதி மூன்று பக்கங்கள் கொண்ட பதில் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் சிறிலங்கா சனாதிபதிக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்கள் குறித்தும் அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றமைக்கான காரணங்கள் குறித்தும் சிறிலங்கா சனாதிபதி விரிவாக விளக்கியுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதியின் இக் கடிதம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

## கிளி. மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பலவற்றை புதிதாக அமைப்பதற்கு கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உதயநகர் மேற்கு, கனகாம்பிகைக்குளம், இராமநாதபுரம், ஆனைவிழுந்தான் போன்ற இடங்களிலும்,

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆலங்கேணி, நாலாங்கட்டை, பள்ளிக்குடா போன்ற இடங்களிலும்,

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் புளியம்பொக்கணையிலும்,

பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பளைப் பகுதியிலும் என நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மொத்தமாக 9 ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களே புதிதாக அமைக்கப்படவுள்ளன. (லோ)

## யூனிஸ் பேச்சுக்கள்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அமைதிப் பேச்சுவார்த்தைகள் அடுத்தமாத ஆரம்பத்தில் நடைபெறலாம் என்று பாகிஸ்தான் தகவல்தொடர்பு அமைச்சர் ரசித் அகமத் கூறியுள்ளார்.

லாகூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பேச்சுக்கள் குறித்து உறுதியான தேதியைக் குறிப்பிடாது இது தமது ஊகம் என்றும் கூறியுள்ளார்.

## 2000 வீதம் வழங்கஏற்பாடு

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினால் பளைப் பிரதேச கச்சாய்வெளிகிராம சேவகர் பிரிவில் உள்ள செல்வாநகர்க் கிராமத்தில் 29 பயனாளிகளிற்கு பணம் பொருள் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக ரூபா 2000 வீதம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பெற்றுள்ளது. (லோ)

## பெண்களுக்கான புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனங்களூடாக பெண்களுக்கான புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சுயதொழில் பயிற்சித் திட்டத்தின் கீழ் தையல், பன்ன வேலைப் பயிற்சி, கணினி வகுப்புக்கள் என்பனவும் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு, சிறுதானியச் செய்கை, சிறு தொழில் கடனுதவி எனும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (பா)

## நியாப் திட்டத்தின் கீழ் 47 கிராமங்கள் அபிவிருத்தி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி முல்லை மாவட்டங்களில் இவ்வாண்டில் 47 கிராமங்கள் நியாப் திட்டந்தின் சமூகவலுவூட்டல் செயற்பாட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

உலகவங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வடக்கு கிழக்கு நீர்பாசன அபிவிருத்தித்திட்டத்தின் இவ்வாண்டுக்கான செயற்பாட்டு ஒப்பந்தத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கைச்சாத்திட்டுள்ளனர். இதன்மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் 29 கிராமங்களும் முல்லை மாவட்டத்தில் 18 கிராமங்களுமாக மொத்தம் 47 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. (லோ)

### சனாதிபதியின்...

முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பொலனறுவையிலும், மாத்தறையிலும், வெனியாவிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. (10)

### சமாதானத்திற்கு...

தளம்பல் நிலையில் மக்களை குழப்புவதற்காகவுமே திட்டமிட்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சமாதானம் வர வேண்டும் என்று உளப்பூர்வமாக முனைப்பாக இருப்பவர்கள் தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும், தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகளும் ஆகும்.

இத்தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் கண்டு பிடிக்கப்பட்டு அதற்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும்
## - உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகளைத் தொடர்ச்சியாக வழங்கப்போவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உட்பூசல்கள் இருந்தாலும் உதவிகளில் எவ்வித மாற்றங்களும் இருக்கமாட்டாது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு அமைப்பு இலங்கையில் அமுல் செய்யவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் புனர்வாழ்வு மீள் குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சர் ஜெயவர்த்தன தலைமை தாங்கியுள்ளார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் உலக உணவு அமைப்பின் ஆசிய வலயத்திற்குப் பொறுப்பான அன்ரனி பென்பெரி உட்பட உயர் மட்ட அதிகாரிகள் குழு கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### சனாதிபதியின் நட...

பெரும் பான்மையைத் தாம் கொண்டிருக்க வில்லை என்பதை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புரிந்து கொள்ள வேண்டும் தாம் அமைச்சர் பதவி எதனையும் வைத்திருக்காத நிலையில் இன்னுமொரு அமைச்சைச் சுவீகரிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உள்ளதா என்பதும் சட்ட ரீதியான வினாவாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழ்கூட்டமை...

சிவசக்தி ஆனந்தன், துரைரட்ணசிங்கம் ரவிராஜ் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஸ் அணித்தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய 12 பேர் கொண்ட அணியினரே தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் அடங்கிய அணியினரை சந்தித்து உரையாடியுள்ளனர். (லோ)

### பொதுத்தேர்...

தற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென வலியுறுத்தியுள்ளார்.

சமாதான முன்னெடுப்பு மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தீர்க்கமான ஓர் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் உட்பூசல்களை ஏற்படுத்தாதிருப்பது சகலரது பொறுப்பாகும் என நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபை இதுவரையில் மொறகொடவின் நிர்வாகத்திலேயே உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கை...

கூறுகையில்;s

தமிழகத்திலுள்ள 104 முகாங்களில் சுமார் 62,000 அகதிகள் தங்கியிருப்பதாக கூறியுள்ளார்.

அந்நாட்டு அகதிகளைத் திருப்பியனுப்புவது குறித்து சிறிலங்கா அரசுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கூறிய சர்மா அகதிகள் மறுவாழ்வுப் பணிகளை தமிழக அரசு மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

### போதிய அதிகார...

ஆரம்பிக்கவில்லை.

டோக்கியோ நகரத்தில் ஆனிமாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ள நிதி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதற்கு முன்பாக போதுமான நிர்வாக நிதி மற்றும் சகல துறைகளிலும் போதிய அதிகாரம் பெற்றஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர். இத்தகைய அமைப்புத் தான் வட-கிழக்கில் வாழும் மக்களின் சகஜவாழ்வை ஏற்படுத்த முடியும்.

மக்கள் தமது இருப்பிடங்களில் குடியேறக் கூடியவகையில் வட-கிழக்கில் மக்கள் குடியிருப்பில் உள்ள இராணுவ முகாங்கள் மக்கள் குடியேறுதலுக்கு ஏற்றவடிவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை அடைவதற்காக தன்னால் இயன்ற சகல முயற்சிகளையும் கூட்டமைப்பு எடுக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சி இறுதிவெற்றி 'பெறும்வரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தமது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்குவார்கள்.

மேலும் சமாதான முயற்சியில் தற்போது நிலவிவரும் விடயங்கள் தொடர்பாக நீண்டநேரம் ஆராயப்பட்டது எனவும் இக்கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.